**உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**
**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02 ஆம் நாள் வியாழன்கிழமை**

**I.A.NO. 03/2026 in O.S. No.61/2019**

திரு.P.இஞ்ஞாசி அந்தோணிராஜ் ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. திரு. U. நாகராஜ்
2. திருமதி. N. முருகலட்சுமி ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதியாக 12.03.2026 அன்று இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.முருகேசன், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி.இன்னாசி அந்தோணி ராஜ் அவர்கள் முன்னிலையாகியுன், மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல் நடத்த வேண்டி கட்டளை 7 விதி 14(3) மற்றும் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**குறியீடு செய்யவேண்டிய கூடுதல் ஆவணங்கள் விபரம்**

| வ.எண். | தேதி | ஆவணங்கள் விபரம் |
|---|---|---|
| 1. | 29.01.1966 | ஜேம்ஸ் மரியம்மாளுக்கு குப்புசாமி நாயுடு வகையறா எழுதி கொடுத்த கிரைய ஆவணம் – சான்று நகல் |
| 2. | 23.02.1970 | அன்னம்மாள், பிளோரா மேரி, எலிசபெத் ஆகியோருக்கு ஆரோக்கியம் பிள்ளை எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் – சான்று நகல் |
| 3. | 08.07.2015 | ராஜலெட்சுமிக்கு தெய்வாணையம்மாள் வகையறா எழுதி கொடுத்த கிரைய ஆவணம் – சான்று நகல் |
| 4. | 03.10.2016 | 2ம் பிரதிவாதிக்கு ராஜலெட்சுமி எழுதி கொடுத்த கிரைய ஆவணம் – சான்று நகல் |
| 5. | -- | வாதியின் தாவா சர்வே எண். 1501/18 க்கான FMB Sketch online copy |
| 6. | -- | பிரதிவாதியின் தாவா சர்வே எண். 1501/26 க்கான FMB Sketch online copy |
| 7. | -- | வாதியின் தாவா சர்வே எண். 1501/18 க்கான பட்டா online copy |
| 8. | -- | பிரதிவாதியின் தாவா சர்வே எண். 1501/26 க்கான பட்டா online copy |
| 9. | -- | வாதி குடியிறுப்பு வீட்டுக்கான மின் கட்டண ரசீதுகள் |
| 10. | -- | வீட்டுவரி ரசீது 914 |
| 11. | -- | தண்ணீர்வரி ரசீது 914 |

**2) <u>மனுவுரை சுருக்கம்</u>**

தாவா அசல் வழக்கு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் அசல் வழக்கு தாக்கல் செய்யும் போது மனுதாரர் கைவசம் இருந்த ஆவணங்களை தாக்கல் செய்திருந்தார், தற்போது அசல் வழக்கில் விசாரணை துவங்கி மனுதாரரது தரப்பில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். இதற்கிடையே எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் முன்னுக்கு பின் முரணான சங்கதிகளை சொல்லி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறான எதிர்வழக்குரையில் முன் ஆவணங்கள் பலவற்றை பற்றி துலக்கியுள்ளார். இந்த நிலையில் அவ்வாறான முன் ஆவணங்கள் பலவும் இந்த அசல் வழக்கு விசாரணைக்கு அத்தியாவசியமான ஒன்றாக உள்ளது, மேலும் தாவா சொத்தின் வருவாய் துறை புல வரைபடங்களும் வழக்கு விசாரணைக்கு முக்கியமான ஒன்றாகும். எனவே, அவ்வாறான ஆவணங்களை சேகரம் செய்து, இத்துடன் தாக்கல் செய்துள்ளார்.

எனவே, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுவுரை சுருக்கம்</u>

மனுதாரர் மனுவில் பாரா 3ல் இந்த எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த ஸ்டேட்மெண்ட்டில் கூறிய விசயங்கள் முரணானவை என்று கூறுவது தறறு. மேலும், வழக்கு விசாரணைக்கு மூல முன் ஆவணங்கள் வழக்கு விசாரணைக்கு அவசியமான ஒன்று என கூறிவிட்டு அத்துடன் தாக்கல் செய்த ஆவணங்கள் சான்றிட்ட நகல்கள் ஆகும். இந்த மனுதாரர் நீதிமன்றத்தில் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்த காலத்தில் அசல் ஆவணங்கள் அவரிடம் வீட்டில் வைத்துள்ளதாகவும் கூறினார். ஆனால் இந்த மனுவுடன் தாக்கல் செய்த 1 முதல் 4 ஆவணங்கள் அசல் ஆவணங்கள் அல்ல . மேலும், அசல் ஆவணங்கள் மனுதாரர்

வசம் உள்ளபோது, அவற்றை தாக்கல் செய்யாமல் சான்று நகல் தாக்கல் செய்துள்ளது சாட்சிய சட்டத்திற்கு எதிரானது. அசல் ஆவணங்கள் மனுதாரர் வசம் உள்ள நிலையில் சான்றிட்ட ஆவணத்தை தாக்கல் செய்ய மனுதாரருக்கு உரிமை இல்லை. எனவே, மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5) <u>தீர்வு</u>**

மனுதாரர்/வாதியின் மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிர்ந்திரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் சொல்லியுள்ள ஆவணங்களை ஏற்கனவே தாக்கல் செய்யாததற்கு, இம்மனுவில் சொல்லியுள்ள காரணம் இம்மனுவை அனுமதிக்க போதுமான காரணம் தான் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தும், தரப்பினருக்கு அவரது ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு போதுமான நியாயமான வாய்ப்பை வழங்க வேண்டும் என்பதை கருத்திற்கொண்டு, இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொண்டும் இவ்வழக்கின் இறுதியான தீர்விற்கு இம்மனுவை அனுமதிப்பதுதான் நீதியின் நலன் கருதி சரியானது என்று இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவில்**, மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.04.02 17:54:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நடுவர் ஆத்தூர்.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி , சான்றாவணங்கள்</u>** : இல்லை

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.04.02 17:54:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நடுவர் ஆத்தூர்.